செய்தி வெளியீடு எண்: 07 நாள்: 04.04.2018.

***தேனி மாவட்டம்***
***தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலமாக,***
***சிறந்த பாட வல்லுநர்களைக் கொண்டு***
***இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***
******

இரயில்வே தேர்வு வாரிய அறிவிக்கையில் 3924 பணிக்காலியிடங்கள் நிரப்பப்படுவது தொடர்பான போட்டித் தேர்வுக்கு, தகுதியுள்ள மனுதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. Bumper Loco Pilot & Technician Posts 945 பணிக்காலியிடங்கள், Group D Post 2979 பணிக்காலியிடங்கள் நிரப்பப்படவுள்ளது.

இப்போட்டித் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் பயன்பெறும் வகையில், தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலமாக, சிறந்த பாட வல்லுநர்களைக் கொண்டு இலவச பயிற்சி வகுப்புகள் 09.04.2018 முதல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் அனைத்து வேலை நாட்களிலும் நடத்தப்படவுள்ளது.

எனவே, மேற்காணும் பணிக்காலியிடங்களுக்கு விண்ணப்பித்துள்ள வேலைநாடுநர்கள், இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பினால் விண்ணப்பப் படிவம், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றின் புகைப்பட நகல்களுடன் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை 06.04.2018-க்குள் நேரில் தொடர்பு கொண்டு தங்களது வருகையினை பதிவு செய்து, இவ்வலுவலகத்தினால் சிறந்த பாடவல்லுநர்களைக் கொண்டு, நடத்தப்படவுள்ள இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**